[2012 ஏப்ரல் 20

பகுதியாக உள்ளதால், அங்குள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவதினால் வனப் பாதுகாப்பிற்கும், வன உயிரினப் பாதுகாப்பிற்கும் இடையூறாக இருக்க வாய்ப்பு உள்ளது. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, ஆய்வு செய்து, தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதியோடு தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

134—

பால் குளிரூட்டும் நிலையம்

***5639—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, பாலுசெட்டிசத்திரத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். காஞ்சிபுரம் மாவட்டம், பாலுசெட்டிசத்திரத்தில் செயல்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள பாலைக் குளிரூட்டும் திறன் கொண்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பாலுசெட்டிசத்திரம் பால் குளிரூட்டும் நிலையத்தினைத் தரம் உயர்த்தி, இதனை ஒரு சிறிய

2012 ஏப்ரல் 20]

பால் பண்ணையாகவே மாற்ற பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் ரூ.2.7 கோடி செலவில், பால் பதப்படுத்தும் இயந்திரம், கொதிகலன் இயந்திரம், பால் பை நிரப்பும் இயந்திரம், குளிர்பதன இயந்திரம் போன்ற தேவையான அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்போது பாலுசெட்டிசத்திரம் பால் குளிரூட்டும் நிலையம் 30,000 லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் பெற்று தினசரி 25,000 லிட்டர் பால் பாக்கெட்டுகளைத் தயாரித்து விற்பனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்கி ஏழை, எளிய மக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாலுசெட்டிசத்திரத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தைத் தரம் உயர்த்தியும், அங்கே ரூ.2.7 கோடி செலவில் பல கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியும், பல்வேறு இயந்திரங்களைப் புதிதாக அமைத்துத்தர உத்தரவிட்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களுடைய சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் இருந்து வந்தது. தற்போது அந்த பால் குளிரூட்டும் நிலையம் சீர்காழி பகுதிக்கு மாற்றப்பட்டுவிட்டது. மீண்டும், மயிலாடுதுறை தொகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் பால் வரத்து அதிகமிருப்பின் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று அங்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

135—

தொழிற்பேட்டை

***5206—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி, பாலவிடுதியில் அரசு தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், சிட்கோ நிறுவனம்மூலம் தொழிற்பேட்டை அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.